பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 02 செவ்வாய்க்கிழமை 18.11.2025 கதிர் 010

### இனி இது ரகசியம் அல்ல!

மன்னாரில் காற்றாலை அமைக்கப்படுவதற்கு எதிராக அண்மையில் மக்கள் மறியல் போராட்டம் நடத்தியபோது பொலிஸார் அவர்களை தள்ளி, ☞ 2

# சிங்களக் காடையர்களுக்கு அடிபணிந்து தமிழருக்கு ஆளும்தரப்பு துரோகமிழைப்பு

## திருமலை புத்தர் சிலை விவகாரத்தையொட்டி கஜேந்திரகுமார் கொந்தளிப்பு

திருகோணமலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றிய போது , சாதாரண சிங்கள மக்கள் அதை எதிர்க்கவில்லை. சிங்களக் காடையர்கள் மட்டுமே எதிர்த்துள்ளார்கள். அவர்களுக்கு அடிபணிந்து நம்பி வாக்களித்த தமிழ் மக்களுக்கு ஆளும்தரப்பு துரோகம் இழைத்துள்ளது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் குற்றஞ்சாட்டினார்

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு - செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உங்களை நம்பி, நீங்கள் சொன்னதை யெல்லாம் நம்பி உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு நீங்கள் முழுமையான துரோகத்தை இழைத்திருக்கிறீர்கள். திருமலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றியபோதுஅங்கிருந்தசாதாரணசிங்கள மக்கள் அதை எதிர்க்கவில்லை. ஏனெனில், இனவாதத்தையும் மதவாதத்தையும் நீக்குவதாக நீங்கள் சொன்னதை நம்பி அவர்கள் உங்களுக்கே ☞ 2

# பாதுகாப்பு அமைச்சர் பொய் சொல்கின்றார்

## சாமர எம்.பி. கொதிப்பு

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சபையில் பொய்யுரைத்தார். அவர் எந்த மதத்தை சேர்ந்தவர்? அவருக்கு ஏதாவது மதம் இருக்கின்றதாஎன்றுதெரியவில்லை. நாங்கள் பௌத்தர்கள். இதனை அலட்சியப்படுத்த முடியாது என புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர ☞ 7

# உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் குறித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு பிறிதொரு சட்டம் கிடையாது. அதேபோல் பௌத்த துறவிகளுக்கு என்றும் பிறிதொரு சட்டம் கிடையாது. அனைவரும் பொது சட்டத்துக்கு கட்டுப்பட வேண்டும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் நீதி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் ☞ 7

# பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்க அறிவிப்பு வெகு விரைவில் வரும்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிப் புதிய சட்டத்தை இயற்றுவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு குழுவினர் சட்ட வரைவினை அளித்துள்ளனர். அந்த வரைவு தமிழ் மற்றும் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்படுகிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கும் சட்ட வரைவு வெகுவிரைவில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டவாட்சிக் கோட்பாடு, செயற்படுத்தல் மற்றும் மனித உரிமைகள்பாதுகாப்பில்இலங்கைமுன்னிலையில்உள்ளது. நீதித்துறை சுதந்திரம் மற்றும் சுயாதீனக் கணக்காய்வு ☞ 2

# திருமலை புத்தர் சிலை விவகாரத்தை நீதிமன்றம் ஊடாகவே தீர்க்கவேண்டும்

## கைவிரித்தார் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

திருகோணமலை நகருக்குள் திடீரென ஞாயிறு இரவு அடாத்தாக வைக்கப்பட்ட புத்தர் சிலை தொடர்பான பிரச்சினையை நீதிமன்றம் ஊடாகவே தீர்த்துக்கொள்ள வேண்டும், கரையோரப பாதுகாப்புத் திணைக்களத்தின் முறைப்பாடுகளும் நீதிமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

திருகோணமலையில் புத்தர் சிலை வைக்கப்பட்டதனால் ஏற்பட்ட அமைதியின்மை குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று அறிவிக்கையில் இதனைத தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலை கோட்டை சம்போதிதாகம் பாடசாலையின் சம்புத ஜயந்தி விகாரையுடன் தொடர்புடைய சம்பவமொன்று நேற்று (நேற்று முன்தினம்) இடம்பெற்றுள்ளது. புத்தர் சிலையொன்று பிரதிஷ்டை செய்யப்பட்டமை தொடர்பில் ஏற்பட்ட குழப்பகரமான நிலைமை தொடர்பாக இரவு பொலிஸாருக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பிரதிஷ்டை செய்யப்பட்ட அந்த புத்தர் சிலைக்குச் சேதம் ஏற்படுத்தக்கூடிய நாசகாரச் செயற்பாடு தொடர்பாகவும் தகவல் கிடைத்துள்ளது.. இதனால் பொலிஸார் குறித்த புத்தர் சிலையை அவ்விடத்தில் இருந்து அகற்றி பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளனர்.

அவசரமாக புத்தர்சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டமை தொடர்பிலேயே அங்கே பிரச்சினை ☞ 7

# திருகோணமலை புத்தர் சிலையை இன, மத வாதமாக மாற்றாதீர்கள்

## அமைச்சர் சுனில் வட்டல கோரிக்கை

திருகோணமலை சம்பவத்தை யாரும் இனவாத, மதவாதமாக மாற்ற வேண்டாம். தற்போது அது நீதிமன்ற நடவடிக்கையாகும். அதனால் நீதிமன்ற நடவடிக்கையில் நாங்கள் தலையிடுவதில்லை என பிரதி அமைச்சர் சுனில் வடகல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செலவு திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். ☞ 2

### இனவாதம் பரப்பாதீர்கள்

# நாமலுக்கு எதிராக சாட்டையை சுழற்றிய சாணக்கியன்

## பிரதி அமைச்சர் அருணை கட்சி மாறவும் வலியுறுத்து

சட்ட ரீதியான செயற்பாடு என்றால் திருகோணமலை கடற்கரை வீதியில் ஏன் இரவோடு இரவாக புத்தர் சிலையை வைக்கவேண்டும். நவம்பர் 21 பேரணிக்கான முன் ஆயத்தமாகவே இது காணப்படுகிறது. ஆளும்தரப்புக்கு எதிரான பேரணிக்கு ஆட்களைக் கொண்டுவரவேண்டுமாயின் அதற்குவேறுவழிமுறைகளைப்பின்பற்றுங்கள். இனவாதத்தை பரப்ப வேண்டாம் என்று நாமல் ராஜபக்சவுக்கு தெரிவிக்கின்றேன். பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா பதவியை துறந்து எமது கட்சியில் இணைய வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறேன் என்று இலங்கைத் தமிழ் அரசுக் ☞ 2

# திருமலை புத்தர் சிலை விவாகரம் குறித்து இரு தரப்பினரையும் அழைத்துப் பேசுக

## எதிர்க் கட்சித் தலைவர் ஆளும்தரப்பிடம் வலியுறுத்து

திருகோணமலை சம்புத்த ஜயந்தி போதிராஜ விகாரையில் பௌத்த மதத்துடன் தொடர்புடைய சகல பணிகளையும் முன்னெடுக்கும் சுதந்திரம், உரிமை தேரர்கள் உள்ளிட்ட நிர்வாக சபையினருக்கு உள்ளது. அதில் தலையிட எவருக்கும் உரிமை கிடையாது. எனவே தற்போது ஏற்பட்டுள்ள நிலமையை சீராக்க உடனடியாக ஆளும்தரப்பின் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மகாநாயக்க தேரர்களை சந்தித்து அவர்களின் ஆலோசனைகளை பெற்று ஏற்படக்கூடிய இனவாத, மதவாத தீயை அணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்று வரவு செலவுதிட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். ☞ 6

# பிக்குகள் மீது தாக்குதல் எங்களுக்கு வலிக்காதா?

## தயாசிறி எம்.பி. கேள்வி

திருகோணமலையில் புத்தர்சிலை விவகாரம் தொடர்பில் அமைச்சர் ஒருவருக்கு வந்த தொலைபேசி அழைப்பொன்றைத் தொடர்ந்தே பொலிஸாரால் பிக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு, புத்தர் சிலை எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என எதிர்க்கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவு திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அங்கு 1951இல் அமைக்கப்பட்ட விகாரையொன்றே இருக்கின்றது. 2004 ஆழிப் பேரலையால் இது அடித்துச் செல்லப்பட்டது. இதற்கு தேவையான தர்மசாலைகளை ☞ 7

# மாகாண சபைத் தேர்தலுக்காக இனவாதத்திற்கு இடமளியாதீர்

## நாமல் நாடாளுமன்றில் தெரிவிப்பு

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் ஆளும்தரப்பு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். மாகாண சபைகள் தேர்தல் வரவுள்ளது, இதற்காக இனவாத மோதல் அவசியம் என்று நினைத்தால் அது உங்களுடைய அரசியல். ஆனால் இது இனவாத பிரச்சினையாகி நாட்டில் குழப்ப நிலைமை ஏற்படலாம். அதற்கு இடமளிக்க வேண்டாம் என நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை வரவு செலவு திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு விகாரையொன்றில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டிருந்தது. இந்நிலையில் பொலிஸுக்கு ☞ 6

## இனி இது .....

விழுத்தி, அடித்து விரட்டினார்கள். அதே சிறீலங்கா பொலிஸார்தான் ஞாயிறு இரவு திருகோணமலையிலும் கடமையில் இருந்தார்கள். அங்கு நின்ற கலகமடக்கும் பொலிஸாரை பிக்குகள் தள்ளி விழுத்த முயற்சித்தபோதும்கூட அவர்களுக்கு எதிராகப் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேபோன்று புத்தர் சிலையை பொலிஸார் அகற்ற முற்பட்டபோது அதனைத் தடுத்து நிறுத்த பிக்கு ஒருவர் சிலையைக்கட்டிப்பிடித்தபடிஇருந்தார். அவரது கையை நீக்கி சிலையை விடுவிக்க பொலிஸ் உயரதிகாரி ஒருவர் முயன்றபோது அந்தப் பிக்கு அந்த உயரதிகாரியின் கன்னத்தைப் பொத்தி அறைந்தார். அதன் பின்னர் உடனடியாகப் பொலிஸார் பலரும் சேர்ந்து அந்தப் பிக்குவை அங்கிருந்து பக்குவமாக இழுத்துச் சென்றனர். ஆனால், பொலிஸ் அதிகாரியைத் தாக்கிய அந்தப் பிக்கு கைது செய்யப்படவில்லை.

பொது இடத்தில் பொது மக்கள் பார்த்திருக்க, பொலிஸாரும் பார்த்திருக்க, உயரதிகாரி ஒருவர் தாக்கப்பட்டிருக்கிறார். அவரது கடமையைச் செய்வதற்கு இடையூறு விளைவிக்கப்பட்டிருக்கின்றது. அது காணொலிகளில் பதிவாகி இருக்கின்றது. ஆனால், அந்தப் பிக்குவை பொலிஸார் பலர் பிடித்திழுத்து அங்கிருந்து பக்குவமாக அகற்றி அவருக்கு எதுவும் அடிகிடி பட்டுவிடாமல் கவனமாகப் பார்த்துக்கொள்கின்றனரே தவிர, பிக்குவைக் கைது செய்யவோ, அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவோ இல்லை. ஆனால், மன்னாரில்தமதுஉரிமைக்காகஅமைதியாகப் போராடிய மக்கள் வாகனங்கள் வீதியில் செல்லவிடாது தடுத்து மறியல் செய்தபோது அவர்கள் அடித்து, உதைத்து, சித்திரவதை செய்யப்பட்டுக் கலைக்கப்பட்டார்கள், கைது செய்யப்பட்டார்கள், அவர்கள் மீது உடனடியாக வழக்குகளும் போடப்பட்டன.

இதுதான் என்பிபி கூறும் அனைவருக்கும் இந்தநாட்டில்சமமாகநடத்தப்படும்இலட்சணம். இனவாத ஜேவிபிக்கு இதுவொன்றும் பெரிய பிரச்சினையில்லை. ஆனால், இந்த இனவாத ஜேவிபியை நியாயப்படுத்தி என்பிபி என்ற பெயரில் அதனைத் தமிழ் மக்கள் மத்தியில் நிலைநிறுத்த தலையால் முயற்சிக்கும் தமிழர்கள், குறிப்பாகக் கற்றறிந்த தமிழர்கள் இதற்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள். இன, மத, சாதி பேதமற்று தமது ஆளும்தரப்பு நடந்துகொள்ளும்என்றுவக்காளத்துவாங்கிய இவர்கள்தான் இப்போது இது குறித்தும் தமிழ் மக்களுக்கு பதில் சொல்ல வேண்டும். தாங்கள் பழமைவாத அரசியல்வாதிகள் அல்லர், புதியவர்கள் நீதியானவர்கள் என்பதைப் போன்று தம்மை வெளிப்படுத்திய இவர்கள், தமது கல்வியறிவையே மற்றைய அரசியல்வாதிகளிலிருந்து தம்மை வேறுபடுத்தும் தகுதியாகக் காண்பித்துக்கொண்ட இவர்கள் இப்போது கட்டாயம் பதிலளிக்கவேண்டும்.

.........................................

தமிழ் அரசுக் கட்சிக்கும் அரசுத் தலைவர் அநுரகுமாரவுக்கும் இடையிலான சந்திப்பு நாளை புதன்கிழமை ஒரு மணிக்கு அரசுத் தலைவர் செயலகத்தில் இடம்பெறவுள்ளது. இதற்கானஉறுதிப்படுத்தல்அரசுத்தலைவரின் செயலாளரால் கட்சியின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இந்தச் சந்திப்புக்கு தமிழ் அரசுக் கட்சி கோரிக்கை வைத்திருந்தது. இந்த நிலையில், திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் பூதாகாரமாக மேற்கிளம்பியிருப்பதால், அது குறித்தும் நாளைய சந்திப்பில் கட்டாயம் பேசப்படவேண்டியநிலைஏற்பட்டிருக்கின்றது.

மாகாணசபைத்தேர்தல், புதிய அரசமைப்பு ஆகிய விடயங்களில் அநுரவிடம் தெளிவான பதில்களேதும் தற்போதைக்கு இல்லாத நிலையில் திருகோணமலை விடயத்தை வைத்து இந்தச் சந்திப்பை ஒப்பேற்றிவிட அவருக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதே யதார்த்தம்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சிங்களக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்களித்திருந்தார்கள். இங்கிருக்கும் திருமலைக்கான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரையும் அவர்கள் தெரிவு செய்திருந்தார்கள்.

சிங்களக் காடையர்கள் மட்டுமே திருகோணமலையில் முறையற்றவகையில் செயற்பட்டார்கள். அதைக்கண்டுஆளும்தரப்பு உண்மையில் பின்வாங்கியிருக்கக்கூடாது. அந்த இனவாத, மதவாதக் காடைத்தனத்தைக் கண்டு பின்வாங்கியிருந்திருக்கக்கூடாது. உண்மையில் ஆளும்தரப்பு என்ன செய்திருக்கவேண்டுமெனில், மக்களிடம் சென்றுஎதுசரி, எதுபிழைஎன்பதை, எப்படியான அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை நேர்மையுடன்சொல்லியிருந்திருக்கவேண்டும்.

ஆளும்தரப்பு முறையற்ற வகையில் செயற்பட்டுஇனவாதிகளுக்குஅடிபணிந்துதமிழ் மக்களுக்குப்பெரும் துரோகமிழைத்துள்ளது. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். கடந்த ஆளும்தரப்பிலும் இவ்வாறான தன்மையே காணப்பட்டது. நம்பிக்கை கொண்ட தமிழ் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளார்கள்.

இனவாதத்தை நாட்டில் இருந்து ஒழிப்பதாகக் கூறிக்கொண்டே இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. கடந்த கால ஆளும்தரப்புகளின் இனவாதக் கொள்கைக்கு எதிராக முறைமை மாற்றத்தை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டனர்.

இந்நிலையில் திருகோணமலையில் நடந்துள்ள சம்பவங்கள் தொடர்பில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அதற்கு முன்னர் திருகோணமலையில் சனத்தொகை தொடர்பில் கூறும்போது, 1871 காலப்பகுதியில் நடத்தப்பட்ட முதலாவது சனத்தொகை கணக்கெடுப்பின்போது, தமிழர் 74.52 வீதமாகவும், முஸ்லிம்கள் 24.72 வீதமாகவும், சிங்களவர்கள் 0.53 வீதமாகவும் இருந்தனர்.

சுதந்திரத்திற்கு முன்னர் 1946இல் நடத்தப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பின்போது தமிழர் 48.74 வீதமாகவும், முஸ்லிம்கள் 39.6 வீதமாகவும், சிங்களவர்கள் 9.87 வீதமாகவும் இருந்தனர். ஆனால் தற்போதைய கணக்கெடுப்பின்படி அங்கே சிங்களவர்களின் எண்ணிக்கை 26.97 வீதமாக இருக்கின்றது.

புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது இன்று தமிழ் மக்கள் சனத்தொகை அங்கே வீழ்ச்சியடைந்துள்ளது. ஆளும்தரப்புகளின் அனுசரணையுடன் வேண்டுமென்றே சனத்தொகை குறைப்பு நடந்துள்ளது. தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களிலேயே சிறுபான்மையினத்தவர்களாக இருக்கின்றனர். அனைத்துநடவடிக்கைகளும் வேண்டுமென்றே நடத்தப்படுகின்றது. அந்த மக்களுக்கு சொந்த இடங்களிலேயே பாதுகாப்பு இன்றி அங்கிருந்து வெளியேறும் நிலமை உருவாகியுள்ளது. அங்கே வேறு இனத்தவர்களை குடியேற்ற முயற்சிக்கப்படுகின்றது. இதற்காகவே விகாரைகள் அமைக்கப்படுகின்றன. அரச அனுசரணையில்முறைமைத்துவத்துடனேயே அவை நடக்கின்றன.

திருகோணமலையில் சர்ச்சைக்குரிய விகாரை 2004 சுனாமி அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்டது. அங்கே சிறிய கட்டடமே முன்னர் இருந்தது. அதுவே சுனாமியில் பாதிக்கப்பட்டது. பின்னர் அது சங்கமித்த விகாரைக்கு மாற்றப்பட்டது. அப்போதிருந்த ஆளும்தரப்பினால் மாற்றுக் காணி ஒதுக்கப்பட்டது. 2014இல் இந்த விகாரைக்காக மீண்டும் காணி ஒதுக்கப்பட்டது. பின்னர் அனைத்தும் சுமுகமாக காணப்பட்டது.

இந்நிலையில் கடந்த வாரத்தில் அங்கு கட்டடங்கள் அமைக்கும் பணிகள் நடந்த நிலையில், அதுநீதிமன்றத்திற்குச்சென்றபோது ஒருவார கால அவகாசம் கோரப்பட்டிருந்தது. இவ்வாறான நிலமையிலேயே அங்கு குறிப்பிட்ட சம்பவம் நடந்துள்ளது. இது இப்போது இனவாதமாக மாற்றப்பட்டுள்ளது.

ஆளும்தரப்பு சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். இனாவதத்தை இல்லாது செய்யவேண்டும். அதற்காகவே இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. ஆனால் வேறு விதமாகச் செயற்படுகின்றனர். நீதி அமைச்சுக்கே இதன் பொறுப்பு உள்ளது. கடந்த கால இனவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டும். ஆனால் அந்த நடவடிக்கை மீண்டும் நடப்பது போன்றே தெரிகின்றது. நீதிஅமைச்சர்நீதியைநிலைநாட்ட அழுத்தத்தை கொடுக்க வேண்டும்.

இனவாத மனப்பாங்கை தோற்கடித்து மக்கள் விரும்புவது போன்று நீங்கள் செயற்படவேண்டும். சிங்கள மக்களும் குறிப்பிட்ட சம்பவத்தை எதிர்க்கின்றனர். அங்கே பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்காக குண்டர்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர். திருகோணமலையில் இருந்து மக்கள் இந்த ஆளும்தரப்பிற்காக வாக்களித்துள்ளனர். மக்களுக்கு சரியானவற்றை நீங்கள் செய்ய வேண்டும். அந்த மக்களுக்கு அநீதி இழைக்கப்பட இடமளிக்கக்கூடாது -என்றார்.

## நாமலுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு - செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலையில் நேற்று (ஞாயிறு) இரவு ஒரு துரதிஸ்டவசமான சம்பவம் நடைபெற்றது. அரசியல் செய்வதற்காகச் சட்ட ரீதியிலான செயற்பாட்டுக்கு இடையூறு செய்யக்கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கு எச்சரிக்கை விடுக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவருக்கும் இதனைக் குறிப்பிட்டுக் கொள்கிறேன். பௌத்தமதத்துக்குமுன்னுரிமை வழங்கவேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிடுகிறார். பௌத்த மதம் அல்ல எந்த மதமும் சட்ட விரோதமான முறையில் செயற்பட முடியாது. அதற்கு இடமளிக்கவும் முடியாது.

திருகோணமலைக் கடற்கரைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் புதிதாக ஒரு விகாரை உருவெடுத்துள்ளது. இந்த விடயம் குறித்துப் பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரவும் கரிசணை கொண்டுள்ளார். மகிந்த ராஜபக்ச மற்றும் கோட்டபய ராஜபக்சவின் ஆட்சியில் ஒரு சில இனவாதத் துறவிகள் இப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் செயற்பட்டார்கள். கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துநீதிமன்றத்துக்கும்அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த விடயத்தில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம்.

ஞாயிறு இரவு 8 மணியளவில் இந்த பகுதியில்திடீரெனபுத்தர்சிலைவைக்கப்பட்டது. இந்த விடயம் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகலவுக்கு தெரிவித்து, இதன் பாரதூரத்தன்மையை எடுத்துரைத்தேன். அதன் பின்னர் இரவு 10 மணியளவில் அந்தச் சிலை அந்த இடத்தில் இருந்து அகற்றப்பட்டது. ஆனால் இவ்விடயம் குறித்து சபைக்கு தெளிவுப்படுத்திய அமைச்சர் ஆனந்த விஜேபால இனவாதிகளின் அச்சுறுத்தல்களுக்குப் பயந்து சிலையை பாதுகாப்பதற்காகவே வெளியில் எடுத்துச் சென்றோம் என்று குறிப்பிட்டார். அமைச்சரின் கருத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

30 வருட காலப் போரின் போது பௌத்த விகாரைகள் மற்றும் சின்னங்கள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்படவில்லை. இரவோடு இரவாகச் சென்று சிலைகளை உடைக்கும் கேவலமான இனம் தமிழினமல்ல, வடக்கில் இராணுவகட்டுப்பாட்டில்உள்ளகத்தோலிக்கத் தேவாலயங்களை இராணுவத்தினரை இடித்தழித்துள்ளார்கள். நாங்கள் அவ்வாறு செயற்படவில்லை.

பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா பதவியை துறந்து விட்டு எமது கட்சியில் இணைந்துக் கொள்ளவேண்டும். அவருக்கு தேசிய மக்கள் சக்தி பொருத்தமற்றது. நானும் கடந்த காலங்களில் சுதந்திர கட்சியில் இருந்தேன். அங்கு இனவாதமே இருந்தது. இந்த ஆளும்தரப்பில் உள்ள சகல தமிழ் அரசியல்வாதிகளும் இதனை எதிர்க்க வேண்டும், தவறைத் தவறு என்று சுட்டிக்காட்டவேண்டும்

புத்தர் சிலை வைத்தது சட்ட ரீதியான செயற்பாடு என்றால் ஏன் இரவோடு இரவாக செல்ல வேண்டும். நவம்பர் 21 பேரணிக்கான முன் ஆயத்தமாகவே இது காணப்படுகிறது. ஆளும்தரப்புக்கு எதிராகப் பேரணிக்கு ஆட்களை கொண்டு வரவேண்டுமாயின் அதற்குவேறுவழிமுறைகளைபின்பற்றுங்கள். இனவாதத்தைபரப்பவேண்டாம்என்றுநாமல் ராஜபக்சவுக்கு குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

சரியான மற்றும் உண்மையை முன்னர் ஏற்றுக்கொண்ட அமைச்சர் ஆனந்த விஜேபால இனவாதிகளுக்கு அச்சமடைந்து தனது நிலைப்பாட்டில் பின்னடைந்ததையிட்டுக்கவலையடைகிறேன். இந்த முறையற்ற செயற்பாட்டுக்கு எதிராக எம்மால்வடக்குமற்றும்கிழக்கு மாகாணத்தில் மக்களை ஒன்றுதிரட்ட முடியும் . ஆனால் நாட்டை நெருக்கடிக்குள்ளாக்க நாங்கள் விரும்பவில்லை.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் நம்பிக்கையில்லை என்று சர்வதேச விசாரணையை பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோருகிறார். நாங்கள் 2009ஆம் ஆண்டு முதல் வெளியக விசாரணைகளையே கோருகிறோம். ராஜபக்சக்கள் மீது போர் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஏன் உரிய நடவடிக்கைகளை எடுக்கப்பயப்படுகின்றீர்கள். புதியஅரசமைப்புப்பற்றிஆளும்தரப்புவழங்கிய வாக்குறுதி இன்று போலியாக்கப்பட்டுள்ளத -என்றார்.

## பயங்கரவாதத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றால் இந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளோம். நீதித்துறையில் ஆளணிப் பற்றாக்குறை பிரதான பிரச்சினையாக காணப்பட்டது. நீதித்துறைக்கு 2,871 பேரைப் புதிதாக இணைத்துக் கொள்வதற்கு பிரதமர் தலைமையிலான குழு அனுமதி வழங்கியுள்ளது.

அரசியல் தேவைக்காகச் சட்டங்களை நாங்கள் இயற்றவில்லை. நாட்டு மக்களின் தேவைகளுக்காகவே சட்டங்களை இயற்றுகிறோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தைநீக்கிபுதியசட்டத்தைஇயற்றுவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு குழுவினர் சட்ட வரைவினை அளித்துள்ளார்கள். அந்த வரைவு தமிழ் மற்றும் சிங்களத்தில் மொழி பெயர்ப்புச் செய்யப்படுகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி சட்ட வரைவு வெகுவிரைவில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்று மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நாங்கள் நிறைவேற்றுவோம். வழங்கிய வாக்குறுதியை நாங்கள் மறக்கவில்லை. நாட்டு மக்களுக்குப் பொருத்தமான வகையில் புதிய சட்டங்கள் இயற்றப்படும் அத்துடன் பழமையான சட்டங்களும் மறுசீரமைக்கப்படும்.

இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் பல சிறந்த சட்டங்களை இயற்றியுள்ளோம். பொருளாதாரம் மற்றும் சமூகமேம்பாட்டைஅடிப்படையாகக்கொண்டு எதிர்வரும் ஆண்டு முதல் காலாண்டில் பல சட்டங்களை இயற்றுவோம்.

நீதித்துறைக்கட்டமைப்பைஇலத்திரனியல் மயப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பிரதம நீதியரசர் அதற்குரிய நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொள்கிறார். சட்டம் சிறந்த முறையில் தற்போது செயற்படுத்தப்படுகிறது. அரசமைப்புக்கு அமைய நீதித்துறை கட்டமைப்பினர் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன் - என்றார்.

## திருகோணமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

நிறைவேற்றுத்துறை, நீதிமன்றம், நாடாளுமன்றம் ஆகிய மூன்று தூண்களும் சமநிலையாகச செயற்படவேண்டும் என நாங்கள் படித்திருக்கிறோம். ஆனால் அது செயற்பாட்டில் வரும் காலம் வரும்வரை நாங்கள் பார்த்திருந்தோம். ஒன்பதாவது நிறைவேற்று ஆளும்தரப்பின் கீழே இந்த மூன்று துறைகளும் சமநிலையாக செயற்பட இடமளிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் ஜேஆர், உயர் நீதிமன்ற நீதியர்களுக்கு கல் எறிந்தார். அவ்வாறு எந்தச் சம்பவமாவது இந்த ஆளும்தரப்பில் இடம்பெற்றிருக்கிறதா?

அதேபோன்று நாட்டில் நீதிமன்றம் சுயாதீனமாக செயற்படுவதில்லை என நாமல் ராஜபக்ச தெரிவிக்கிறார். ஆனால் மகிந்த ராஜபக்சவின் காலத்தில் பசில் ராஜபக்சவின் வழக்கை கையாண்டுவந்த சட்டத்தரணியை உயர்நீதிமன்றத்துக்குநீதியரசராகநியமித்தார். அதன் பின்னர் திவிநெகும வழக்கில் பசில் ராஜபக்சவுக்கு சார்ப்பாக தீர்ப்பெழுதவில்லை என்பதறக்காக பிரதமர நீதியரசர் சிராணி பண்டார நாயக்கவை விரட்டினார்கள். அதன் பின்னர் செலான் வங்கியின் தலைவரை உயர்நீதிமன்ற ஆசனத்தில் அமர்த்தினார்கள். இவர்கள்தான் இன்று நீதிமன்ற சுயாதினம் தொடர்பில் கதைக்கின்றனர்.

அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சி நீதிமன்றத்தை எவ்வாறு வழிநடத்தினார்கள், நீதிமன்ற சுயாதீனத்தன்மையை எவ்வாறு பாதுகாத்தார்கள் என்பது வரலாற்றில் எழுதப்பட்டிருக்கிறது. மகிந்த ராஜபகச காலத்தில் நீதிமன்றத்துக்கு எவ்வாறு அழுத்தம் பிரயோகிகப்பட்டிருக்கிறது, என்பது தொடர்பில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போதுதான நீதிமன்றங்கள் சுயாதீனமாகச் செயற்படுகின்றன. நீதிபதிகளின் இடமாற்றம் தொடர்பில் நீதிச்சேவை ஆணைக்குழுவே நடவடிக்கை எடுக்கிறது. அதில் யாருக்கும் அழுத்தங்கள் கொடுக்க முடியாது. ஆனால் நாடாளுமன்ற

தொடர்ச்சி 6ம் பக்கம்....


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஆளும்தரப்பின் இரட்டை முகம்

திருகோணமலையில் ஞாயிறு இரவு நேரத்தில் இடம்பெற்ற அனுமதியற்றபுத்தர்சிலைநிறுவல்சம்பவம், வடகிழக்குபிரதேசங்களின் நிலச் சட்டம் மற்றும் இன உணர்வுகளை பௌத்த பேரினவாதம் எவ்வளவு எளிதில் மீற முடியும் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது. கடற்கரை பாதுகாப்புச் சட்டங்கள் முதல் நகரமைப்பு விதிகள் வரை எதுவுமே பின்பற்றப்படாத நிலையில், சில துறவியர்கள் இரவுக்குள் சிலையை நிறுவிய சம்பவம் மட்டும் அல்ல; அதனை அகற்ற வந்த அதிகாரிகளை மிரட்டும் போக்கும் நாட்டின் சட்ட ஒழுங்குக்கு விடுக்கப்பட்ட வெளிப்படை சவாலாகும்.

### ஆனால் இதனைக் காட்டிலும் பெரியது,

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆளும்தரப்பு காட்டிய நடத்தை. சட்டம் மீறப்பட்ட இடத்தில் சட்டத்தை நிலைநாட்டாமல், மாறாக அனுமதியின்றி வைக்கப்பட்ட சிலையை காவல்துறையினரே மறுநாள் 'பாதுகாப்பு' என்ற பெயரில் மீண்டும் கொண்டு வந்து பொருத்தும் நிலை, புதிய ஆட்சியின் வாக்குறுதிகளையே முழுமையாகக் கேலிக்குறியாக்கியுள்ளது. இது வெறும் ஒரு சிலை விவாதம் அல்ல; சிறுபான்மை மக்கள் நம்பிக்கையில் ஒரு பெரும் பிளவை உண்டாக்கும் அதிகாரப் பாவனையின் மிகத் தெளிவான வடிவம்.

### சட்டம் எங்கே?

ஏதேனும் கட்டுமானம் செய்ய, குறிப்பாக கடற்கரை பாதுகாப்பு ஆணையம் மற்றும் நகரமைப்பு அதிகார சபையின் அனுமதி பெறுவது இலங்கையில் கட்டாயம். ஆனால் இங்கு எந்த சட்டமோ நடைமுறையோ பின்பற்றப்படவில்லை. சம்பவ இடத்துக்கு சென்ற அதிகாரிகள் பௌத்த துறவியர்களால் தடுக்கப்பட்ட சம்பவம், நாட்டில் சட்டம் ஒரே மாதிரியாக அனைவருக்கும் பொருந்தவில்லை என்பதை ஓங்கிக் காட்டுகிறது. இது ஜனநாயகத்திற்கும் நீதிமுறைக்கும் நேரடி அவமதிப்பு.

சட்டவிரோதமாக வைக்கப்பட்ட சிலையை இரவிலேயே அகற்றிய பொலிஸார், மறுநாள் பொது பாதுகாப்புச் செயலாளர் உத்தரவின் பேரில் அதையே திரும்பக் கொண்டு வந்து வைப்பது, 'சட்டம் எதற்காக?' என்ற கேள்வியை எழுப்புகிறது. அனுமதி இன்றி கட்டப்பட்டதால் அகற்றப்பட்டது என்பது உண்மை. ஆனால் 'இனவாத ஆபத்து' என்ற பெயரில் அதனை மீண்டும் பொருத்துவது, மிரட்டலுக்கு அரசு தானே பணிந்த மாதிரியே தெரிகிறது.

இது ஒரு சட்டவிரோத செயலை அரசே சட்டப்பூர்வமாக்கியதற்கு ஒப்பாகும். இது ஆட்சியால் ஊக்குவிக்கப்படுகிற மறைமுக அனுமதி அல்லாது வேறு என்ன?

### சிறுபான்மை சமூகங்கள் மீதான அலட்சியம்

திருகோணமலை, பல தசாப்தங்களாக நில உரிமை, மத அடையாளங்கள், வரலாற்று விளக்கங்கள் ஆகியவற்றில் இன உணர்வுகளைச் சுமந்த பகுதி. இங்கு எந்த மதச் சின்னத்தையும் அனுமதி இன்றி நிறுவுவது, பாரிய இனஅமைதி சிக்கல்களை உருவாக்கும். புதிய ஆட்சியான தேசிய மக்கள் சக்தி (NPP) 'எல்லாருக்கும் சம ஆட்சி' என்று வாக்குறுதி அளித்த போதிலும், இந்தச் சம்பவத்தில் எடுத்த நிலைப்பாடு, அவர்கள் முன்வைத்த உயர்ந்த கோட்பாடுகள் எல்லாம் தேர்தலுக்கான கோசம்தான் என்று தீவிர சந்தேகத்தை உருவாக்கியுள்ளது.

இனஅமைதி, சமத்துவம், சட்டம் அனைத்தும் சமமாக நிறைவேற்றப்படும் என்று கூறிய ஆட்சி தற்போது மறைமுகமாக ஒரே சமூகத்தின் அழுத்தத்துக்கு தாழ்த்துப்பட்டது என்று சிறுபான்மை சமூகங்கள் உணர்வது தவறு இல்லை.

சில அமைச்சர்கள் 'இது ஒரு சிறிய புரிதல் பிழை' அல்லது 'மத உணர்வுகளை மதிக்க வேண்டும்' என்ற பெயரில் இந்தச் சம்பவத்தை துறக்க முயற்சிப்பது, மிகப் பெரிய அரசியல் மனோபாவப் பிழை.

சட்டம் மீறப்பட்ட இடத்தில் மத உணர்வை காட்டுவது எப்போதும் ஆபத்தானது. அது இன்று ஒரு சிலை என்றால், நாளை நிலப் பிடிப்பு அல்லது பிற தடையற்ற விரிவாக்கங்களுக்குப் பச்சைக்கொடி காட்டும் நிலை உருவாகிவிடும்.

### ஆளும்தரப்பின் பொறுப்பு எங்கே?

ஆட்சியில் உள்ளவர்கள் இன்று கடைபிடிக்க வேண்டியது ஒரே ஒன்று – சட்டம். அது யாருக்கும் தனி சலுகை தரக்கூடாது. ஆனால் இங்கு சட்டத்தைக் காக்க வேண்டியவர்களே, சட்டத்தை மீறிய செயலைக் காக்க முனைந்துள்ளனர்.

இது ஆட்சியின் ஆட்சிக் கோட்பாட்டை மட்டுமல்ல;

அது நாட்டின் சமத்துவ அடித்தளத்தையே குலைக்கும் செயல்.

முடிவுரை – இன அமைதிக்கான உண்மையான சோதனை

திருகோணமலைச் சம்பவம், புதிய ஆட்சியின் உண்மையான முகத்தை வெளிப்படுத்தும் மிகப் பெரிய சோதனை.

சிறுபான்மை சமூகங்கள் எதிர்பார்த்த நியாயம், சமத்துவம், சட்டத்தின்மேலாதிக்கம்ஆகியவைவெறும்தேர்தல்வாக்குறுதிகளாகவே நின்றுவிட்டதா? அல்லது அரசு உண்மையில் தவறை திருத்தி, சட்டத்தை நிலைநாட்டுமா?

அனுமதியற்ற சிலையை அரசின் பாதுகாப்புடன் மீண்டும் பொருத்துவது போன்ற செயல்கள் தொடர்ந்தால், 'இந்த ஆட்சி இனஅலட்சியத்தை முடிவுக்கு கொண்டு வரும்' என்ற நம்பிக்கை முற்றிலும் நிலையிழக்கும்.

சட்டம் ஒருவருக்காக அல்ல – அனைவருக்காக.

அதைப் புதிய ஆட்சி உணர்ச்சியுடன் புரிந்துகொள்ள வேண்டிய நேரம் இது.

# ஆளும்தரப்புக்குத் தேவையான குற்றக் குழுக்களுக்கு சுதந்திரம்

## நாடாளுமன்றில் நாமல் எம்.பி. குற்றச்சாட்டு

ஆளும்தரப்புக்குத் தேவையான சில ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் ஒழிப்பிற்கு நாம் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம். ஆனால் பொலிஸார் இந்த விடயத்தில் பக்க சார்பாக நடந்து கொள்வதை அனுமதிக்க முடியாது என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதில் எவ்வித சிக்கலும் இல்லை. அதனை நாம் வரவேற்கின்றோம். ஆனால் இந்த விடயத்தில் பொலிஸார், ஜே.வி.பி. அல்லது தேசிய மக்கள் சக்திக்குச் சார்பாகச் செயற்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. போதைப்பொருள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆளுந்தரப்புடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படும் போது, அதனை மறைப்பதற்கும் முயற்சிக்கின்றனர். எனவே அவ்வாறு பகிரங்கமாகப் பக்கச் சார்பாக செயற்படவேண்டாம் என பொலிஸ் மா அதிபரை வலியுறுத்துகின்றோம்.

ஜே.வி.பி.யுடன் தொடர்புடைய பாடசாலை அதிபர்கள், பாடசாலைகளுக்குள் போதைப்பொருட்களை விநியோகிக்கின்றனர். சுமார் ஒரு மாதத்துக்கு முன்னர் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தாலும், அது குறித்து வெளிப்படுத்தப்படவில்லை. இவ்வாறு செயற்படுவதை தவிர்க்கவேண்டும். இளம் தலைமுறையினரை பாதுகாப்பதற்காக வெளிப்படை தன்மையுடன் செயற்படவேண்டும். அத்தோடு ஆளும்தரப்புக்குத் தேவையான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கும் இடமளிக்க வேண்டாம்.

சில அமைச்சர்களின் செயற்பாடுகள் மற்றும் நடத்தைகளில் அவ்வாறான போக்கினையும் அவதானிக்க முடிகிறது. பொலிஸார் இவை தொடர்பிலும் பக்கசார்பற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். இவை அனைத்திற்கும் எதிராக குரல் கொடுப்பதற்காகவே நாம் நவம்பர் 21 ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருக்கின்றோம். ஆளும்தரப்பின் இவ்வாறான செயற்பாடுகளை எதிர்க்கும் அனைவரும் நுகேகொடையில் எம்முடன் இணைவர். அரசியல் தலைவர்கள் மற்றும் கட்சிகள் மாத்திரமின்றி நாட்டை நேசிக்கும் மக்களும் நுகேகொடை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்றார்.

# ஜெனிவா கூட்டத் தொடரின்போது நடுநிலையாக நடந்துகொண்டோம்

## அயலுறவுத்துறை அமைச்சர் இப்படிக் கருத்து

அமெரிக்க அதிபரின் விசேட வரியை நூற்றுக்கு 40 வீதத்தில் இருந்து நூற்றுக்கு 20 சதவீதம் வரை குறைத்துக்கொள்ள எமக்கு முடியுமாகி இருக்கிறது. என்றாலும் இது தொடர்பான உடன்படிக்கை இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின்போது, நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்புக்காக நாங்கள் நடுநிலையாக செயற்பட்டிருக்கிறோம். ஜெனிவா மனித உரிமைகள் பேரவையை நாங்கள் பேய் என்றோ கடவுள் என்றோ தெரிவிப்பதில்லை என அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவு திட்டத்தின் அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுற்றுலாத்துறை அமைச்சு மற்றும் நீதி, தேசிய ஒருமைப்பாடு அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஒருவருட காலத்தில் உலகில் அனைத்து நாடுகளுடனும் எமது இராஜதந்திர நடவடிக்கைகளை பலப்படுத்திக்கொண்டிருக்கிறோம். எமது நட்புறவு, இராஜதந்திர நடவடிக்கைகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக கடந்த ஒருவருட காலப்பகுதிக்குள் வெளிநாட்டு அரச தலைவர்கள் 20 பேர் வரை எமது நாட்டுக்கு வந்துள்ளனர். அது மாத்திரமின்றி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் 9 வருடங்களுக்கு பின்னர் எமது நாட்டுக்கு வந்திருந்தார். அதன் மூலம் எமது நாட்டின் மனித உரிமைகள், ஜனநாயகத்தை நாங்கள் உறுதிப்படுத்தி இருக்கிறோம்.

அதேபோன்று சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிதி நிறுவனங்கள் பல்வேறு வகையில் எங்களுடன் உத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றன. அதனை உறுத்திப்படுத்தும் வகையில் உலக வங்கியின் தலைவர் இந்தக் காலப்பகுதியில் இலங்கைக்கு வந்தார். இதன் மூலம் எமது அபிவிருத்தி வேலைத் திட்டங்களை உலக வங்கி ஊடாக மேற்கொள்ள உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதேநேரம் எமது அரசுத் தலைவர் வெளிநாடுகளுக்கு 8 அரசு முறைப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். பிரதமர் 6 அரசு முறைப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். இதன் மூலம் எமது தொடர்புகளை சர்வதேச நாடுகளுடன் பலப்படுத்திக்கொள்ளவும் அந்த நாடுகளின் வியாபாரிகளுடன் புதிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் முதலீட்டார்களை நாட்டுக்கு அழைத்துவரவும் தேவையான கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியுமாகி இருக்கிறது.

அதேபோன்று எமது நாடு ஒரு சில நாடுகளுடன் நீண்டகாலமாகப் பொருளாதார, அரசியல் தொடர்புகளை பேணாமல் இருந்து வந்துள்ளது. நாங்கள் ஒருவருட காலத்துக்குள் பூட்டான், பங்களாதேஷ், நெதர்லாந்து, இத்தாலி, ஜப்பான், பிலிப்பீன்ஸ், ஐக்கிய அரபு இராஜ்ஜியம் போன்ற நாடுகளுடன் அரசியல், பொருளாதார கலந்துரையாடல்களை மீண்டும் தொடங்கியிருக்கிறோம். இந்த நாடுகளுடன் பொருளாதார ஒப்பந்தங்களையும் மேற்கொண்டுள்ளோம். ஒரு வருடகாலத்தில் அரசியல், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பில் வெளிநாடுகளுடன் புதிதாக 70 ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளோம். இது பெரும் வெற்றியாகும்.

மேலும் 150 வெளிநாட்டு நிறுவனங்களுடன் புதிய முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொள்ள முடியுமாகி இருக்கிறது. அதேபோன்று எமது வியாபாரிகள் வெளிநாடுகளில் வியாபாரம் செய்ய வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். பல நாடுகளுடன் இருதரப்பு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

மேலும் அமெரிக்க அதிபரின் விசேட வரிவித்திப்பில் எமக்கு நூற்றுக்கு 40 வரி விதிக்கப்பட்டிருந்தது.அதனை நூற்றுக்கு 20 வீதம் வரை குறைத்துக்கொள்ள எங்களுக்கு முடியுமாகி இருந்தது. அத்துடன் எமது சில உணவு பொருட்களுக்கு வரியே இல்லாத நிலையை ஏற்படுத்த அதிபர் ட்ரம் நவம்பர் 13 புதிய உத்தரவொன்றை விடுத்திருக்கிறார். எமது தொடர்புகள் மூலமே இந்த விடயங்களை அடைந்துகொள்ள முடியுமாகி இருக்கிறது. இந்தியாவால்கூட இதனைச் சாதிக்க முடியாமல் போயிருக்கிறது. என்றாலும் இது தொடர்பான கலந்துரையாடல் இன்னும் இடம்பெற்று வருகிறது. இன்னும் இது தாடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பில் இதுவரை 17 தடவைகள் பேச்சு இடம்பெற்றிருக்கின்றது.

அதேவேளை, அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் கூட்டத் தொடரில் அரசுத் தலைவர் கலந்துகொண்டு பலஸ்தீன மக்களின் உரிமை தொடர்பில் எமது நாட்டின் நிலைப்பாட்டைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின்போது, நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்புக்காக நாங்கள் நடுநிலையாகச் செயற்பட்டிருக்கிறோம். ஜெனிவா மனித உரிமைகள் பேரவையை நாங்கள் பேய் என்றோ கடவுள் என்றோ தெரிவிப்பதில்லை. அதனால் எமது நாடின் மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் எமது நிலைப்பாட்டை தெளிவாக உறுதிப்படுத்தி இருக்கிறோம்.

இவ்வாறான பல வெற்றிகளை இந்தக் குறிய காலத்தில் நாங்கள் அடைந்திருப்பதையிட்டு, நாடு என்ற வகையில் மகிழ்ச்சியடைகிறோம் - என்றார்.


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57

காலைக்கதிர் Kalaikkathir

## திருகோணமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புரிமைகளைப்பயன்படுத்திக்கொண்டு,பல விடயங்களையும்தெரிவிக்கின்றனர்.அதனால், வெளியில் இடம்பெறும் ஒரு சம்பவத்தைப் பயன்படுத்திக்கொண்டு,சபையில்உரையாற்ற முடியாத வகையில் நிலையியற் கட்டளையில் திருத்தம் மேற்கொள்ள முடியுமானால், அதனை மேற்கொள்ளவேண்டும். சுயாதீன நிறுவனங்கள், சுயாதீனமாக செயற்பட இடமளிக்கவேண்டும்.

திருகோணமலைச் சம்பவத்தை ஒரு சிலர் இனவாதமாக்க முயற்சிக்கின்றனர். திருகோணமலையில் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளமை உண்மை. அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளைத் தொடக்கியுள்ளனர். அதேநேரம் நீதிமன்றத்துக்கும் அறிவித்திருக்கிறது. தற்போது அது நீதிமன்ற நடவடிக்கையாகும். அதனால் அந்த நீதிமன்ற நடவடிக்கையில் நாங்கள் தலையிடுவதில்லை. எனவே இந்தச் சம்பவத்தை இனவாத, மதவாதமாக மாற்ற வேண்டாம். அதேநேரம் நீதிமன்ற சுயாதீனத்தை உயர்ந்த மட்டத்தில் பாதுகாத்துவரும் ஆளும்தரப்பு நாமே என்பதை பெருமையுடன் தெரிவிக்கிறேன் - என்றார்.

## மாகாண சபைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பான அமைச்சர் புத்தர் சிலையின் பாதுகாப்புக்காக அது அங்கிருந்து அகற்றப்பட்டு வெளியில் கொண்டு செல்லப்பட்டது என்று கூறியுள்ளார். ஆனால் இந்தச் சம்பவத்தில் பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகி இரண்டு பிக்குகள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விகாரை 1951ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு 2004இல் புனித பூமியாக அறிவிக்கப்பட்டு, கிழக்குமாகாணத்தின்பழைய அறநெறி பாடசாலையாக இருக்கின்றது. இது தொடர்பில் ஆளும்தரப்புத் தலையிட்டுக் கலந்துரையாட வேண்டும். இதனை இனவாத பிரச்சினையாக்க வேண்டாம். இதனை இனவாத முறுகலாகவும் மாற்றவேண்டாம். இந்த விடயத்தில் தலையிட்டு அரசுத் தலைவர் தனது நிலைப்பாட்டை கூறி, இருதரப்பையும் அழைத்து இது தொடர்பில் நியாயத்தை வழங்கவேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் தேர்தல் வரவுள்ளது. இதற்காக இனவாத மோதல் அவசியம் என்று நினைத்தால் அது உங்களுடைய அரசியலாகும். ஆனால் இந்த விடயத்தில் ஆளும்தரப்புத தலையிட்டுத் தீர்க்கவேண்டும். இவ்வாறானவற்றுக்கு இடமளிக்க வேண்டாம். இதற்கு இடமளித்தால் இறுதியில் இது இனவாதப் பிரச்சினையாகி நாட்டில்குழப்பநிலைமையொன்றுஏற்படலாம். அதனால் இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதேவேளை பிக்குகள் இருவர்மீதுநடத்தப்பட்டதாக்குதல்தொடர்பிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை, நீதி அமைச்சு வரலாற்றில் அதிகமாக அரசியலாக்கப்பட்டிருப்பது இந்த காலப்பகுதியிலாகும். இன்று பொலிஸ் மா அதிபரின் முறைப்பாட்டுக்கமைய கீழ் நிலை நீதிபதிகளின் பணி இடை நிறுத்தப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், பொலிஸ் மா அதிபரின் தேவைக்கமைய கீழ் நிலை நீதிமன்றங்கள் செயற்டுவதில்லை என்பது அதன் மூலம் தெளிவாகிறது. கீழ் நிலை நீதிமன்ற தீர்ப்பில் திருப்தி இல்லை என்றால், அதற்கு மேல் இன்னும் 3 நீதிமன்றங்கள் இருக்கின்றன. அங்கு செல்லலாம். அவ்வாறு இருக்கையில், ஏன் அவர்களைப் பணி இடை நிறுத்தவேண்டும்.?

அத்துடன்கடந்தகாலங்களில்நீதிபதிகளின் பதவி உயர்வு மற்றும் இடமாற்றங்கள் நீதிபதிகளின் சேவை மூப்பு நிலையைக் கவனித்தே வழங்கப்படுகின்றன. ஆனால் தற்போது அதற்கு மாறாகவே இடம்பெறுகிறது. ஆளும்தரப்பின் தேவைக்காக இவ்வாறு செயற்படுகின்றதாகவே எமக்குத் தோன்றுகின்றது. ஆளும்தரப்பின் இந்த நடவடிக்கையால் எமது நீதிமன்றக் கட்டமைப்பே வீழ்ச்சியடையும் - என்றார்.

## திருமலை புத்தர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

நாட்டின் அரசமைப்புக்கமைய பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அத்துடன் பௌத்தசாசனத்தை பாதுகாப்பது ஆளும்தரப்பின் பொறுப்பு. அதேபோன்று மற்றைய மதங்களுக்கும் உரிய இடத்தை வழங்குவது தொடர்பிலும் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமையில் 1951ஆம் ஆண்டில் திருகோணமலை சம்புத்ஜயந்தி போதிராஜ விகாரை தொடங்கப்பட்டது. 2010ஆம் ஆண்டில் பௌத்த நடவடிக்கைகள் திணைக்களத்தில் அது பதிவு செய்யப் பட்டுள்ளது. புனிதபூமிஉரித்தும்பெற்றுக்கொள் ளப்பட்டுள்ளது. அந்த விகாரையில் பௌத்த மதத்துடன்தொடர்புடையசகலபணிகளையும் முன்னெடுக்கும் சுதந்திரம், உரிமை தேரர்கள் உள்ளிட்ட நிர்வாக சபையினருக்கு உள்ளது. இதனையே பின்பற்றவேண்டும். பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கி மற்றைய மதங்களுக்கும் உரிய இடங்களை வழங்கிச் செயற்பட வேண்டும்.

ஆனால் இப்போது என்ன நடந்துள்ளது? அந்த புனித பூமிக்குள் பொலிஸார் நுழைந்து, புத்தர் சிலை இருக்க வேண்டிய இடம் தொடர்பில் தீர்மானிக்கின்றனர். அதேபோன்று அறநெறி பாடசாலை கட்டடம் அமைக்கப்பட வேண்டிய முறை மற்றும் அதற்கு தடைகளை விதித்தல் ஆகியன தொடர்பிலும் உத்தரவு கள் பிறப்பிக்கப்படுகின்றன. இவ்வாறு நடந்துகொள்வதன்ஊடாகஎமதுமக்களிடையே இனவாத அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு பார்த்துக்கொண்டிருக்கும் குழுக்களுக்கு வலுச் சேர்க்கப்படுகிறது. தேசிய நல்லிணக்கத்திற்கு எதிராக இவர்களுக்கு உற்சாகம் அளிப்பதே இங்கு நடக்கின்றது.

புதினபூமிக்குள்மதநடவடிக்கை,அறநெறிப் பணிகளைமுன்னெடுக்கும்சுதந்திரம்உள்ளது. ஏதேனும் பிரச்சினை இருப்பின் சம்பந்தப் பட்ட பௌத்த பீடங்கள் மற்றும் மகாநாயக்க தேரர்களைச்சந்தித்துஅதுதொடர்பில்கலந்துரை யாடி வேலைகளைச் செய்யவேண்டும். அதனை விடுத்து நள்ளிரவில் பொலிஸாரை அனுப்பி விகாரையில் நடக்கும் அபிவிருத்திப் பணிகளில் எவ்வாறு தலையிட முடியும்? இது யாருடைய உத்தரவு? இந்த நடவடிக்கைகளை செயற்படுத்துவது யார்?

இதனால் ஆளும்தரப்பிற்கு ஒன்றைக் கூறுகின்றோம். நாட்டின் மேலான சட்டம் தொடர்பில் தெரியவில்லை என்றால் அதன் பிரதிகளை ஹன்சாட்டில் இணைக்கின்றேன். இதேவேளை ஏற்பட்டுள்ள நிலைமையை தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்கின்றேன். ஆளும்தரப்பின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மகாநாயக்க தேரர் களைசந்தித்துஅவர்களின்ஆலோசனைகளைப் பெற்று ஏற்படக்கூடிய இனவாத, மதவாதத் தீயை நிறுத்தி நீதி, நியாயத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

## திருமலை புத்தர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுந்திருந்தது. இந்நிலையில் மீண்டும் அந்த புத்தர்சிலையை அந்தவிகாரையில் பிரதிஷ்டை செய்யுமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதற்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ப்பட்டுள்ளன.

கரையோர பாதுகாப்பு திணைக்களத்திடம் இருந்து இது தொடர்பில் முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றிருந்தது. அங்கே சிற்றுண்டிச்சாலையொன்று நடத்திச் செல்லப்படுவதாகவும் இது சட்டவிரோதமானது என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் நீதிமன்றம் ஊடாக நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். இதனால் நீதிமன்ற தீர்ப்புக்கு அமையவே செயற்பட வேண்டும்.

இவ்வாறான நிலைமையில் அங்கே புத்தர் சிலை தொடர்பில் எழுந்த பிரச்சினைகளால் அதன் பாதுகாப்பு கருதி அந்த புத்தர்சிலை அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது. அது இன்று (நேற்று) காலையில் விகாரையில் தாகம் பாடசாலை பகுதியில் பிரதிஸ்டை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த காணி தொடர்பான பிரச்சினையை நீதிமன்றம் ஊடாகவே தீர்த்துக்கொள்ள வேண்டும். இது தொடர்பில் நீதிமன்றத்திற்கு அறிவித்து நீதிமன்ற தீர்மானங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும். கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினால் முன்வைக்கப்படும் விடயங்களும் நீதிமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எவ்வாறாயினும் புத்தர்சிலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீண்டும் துரதிஸ்டவசமான சம்பவங்கள் திருகோணமலை நகரில் இடம்பெறுவதற்கு இடமளிக்க முடியாது. சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கு தேவையான ஆலோசனைகள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

## பிக்குகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதற்கான அடிக்கல்லை காலையில் வைத்து பின்னர் இரவு புத்தர் சிலை வைக்கப்பட்டது. பொலிஸார் அங்கு வந்து பிக்குகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். முத்துக் குடையை உடைத்தே பிக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது எங்களுக்கு வலிக்காதா? சிங்கள பௌத்தர்கள் சிங்கள பௌத்தர்களாக இருக்க வேண்டும். தமிழர், முஸ்லிம்களுக்கும் அந்த உரிமைகள் இருக்கவேண்டும். இது புதிய புத்தர் சிலையை அமைப்பதோ, புதிய வேலைக்கானதோ அல்ல.

இது தொடர்பில் பொலிஸாருக்கு ஏதேனும் முறைப்பாடு கிடைக்குமாக இருந்தால் பொலிஸார் அது தொடர்பில் விசாரணை நடத்தி பிக்குகளையும் அழைத்து விசாரணை நடத்தினால் பிரச்சினை முடிந்திருக்கும். ஆனால் யாருடையதோ தொலைபேசி அழைப்பு அமைச்சருக்கு வருகின்றது. அமைச்சர் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கக் கூறுகின்றார். பின்னர் பிக்குகள் மீது தாக்குதல் நடத்தி புத்தர் சிலை தூக்கிச் செல்லப்படுகிறது.

இந்நிலையில் இப்போது அந்த புத்தர்சிலையை மீண்டும் கொண்டுவந்து வைப்பதாகக் கூறுகின்றனர். புதிதாக அதனை கொண்டுவந்து வைக்க வேண்டியதல்ல. அது அங்கிருந்த சிலையே.. இது இந்த இடத்தில் நிறுத்தப்படப்போவதில்லை. அண்மையில் தெஹிவளையில் புத்தர் சிலையொன்று எடுத்துச் செல்லப்பட்டது. இது எல்லா இடங்களிலும் நடக்கின்றது. இதனால் பௌத்த மதத்தை பாதுகாக்கும் வேலைத்திட்டம் அவசியமாகும். இது தொடர்பில் சரியான வேலைத் திட்டங்களை முன்னெடுக்குமாறு நாங்கள் கோருகின்றோம் - என்றார்.

## பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு - செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால திருகோணமலை புத்தர் சிலை அகற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் சபைக்கு விளக்கமளித்தார். நாங்கள் பௌத்தர்கள். இதனால் எங்களுக்கு பிரச்சினை உள்ளது. எந்த மதத்தை எவரும் பின்பற்ற முடியும். திருகோணமலை போன்ற பிரதேசங்களில் சிறிதளவான பௌத்தர்களே வாழ்கின்றனர். பொலிஸுக்கு பொறுப்பான அமைச்சர் என்ன கூறினாலும் அங்கு குறித்தப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை.

அந்த அமைச்சருக்கு மதமொன்று இருக்கின்றதா என்று தெரியவில்லை. ஆனால் எங்களுக்கு மதம் உள்ளது. இங்கு அந்த அமைச்சர் பச்சைப் பொய்களைக் கூறிவிட்டு போய்விட்டார். நாங்கள் பௌத்தர்கள் இதனை அலட்சியப்படுத்த முடியாது என்றார்.

## உரிய சட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் குறித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நாட்டில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு என்று பிறிதொரு சட்டம் கிடையாது. அதேபோல் பௌத்த துறவிகளுக்கு என்றும் பிறிதொரு சட்டம் கிடையாது. அனைவரும் பொதுச் சட்டத்துக்குக் கட்டுப்பட வேண்டும்.

இனவாதம் மற்றும் வெறுப்பு பேச்சுகளுக்கு இடமளிக்க முடியாது. வடக்கு , தெற்கு, கிழக்கு என்று வேறுபாடின்றி அனைத்து இன மக்களையும் நாங்கள் ஒருமித்தே பார்க்கிறோம். அனைவரும் சமமாக நடத்தப்படுவார்கள்.

வழக்குத் தொடுநர் அலுவலகம் பற்றி கஜேந்திரகுமார் குறிப்பிட்ட ஒருசில விடயங்களை ஏற்றுக்கொள்கிறோம். இந்த அலுவலகம் இந்த நாட்டில் இடம்பெற்ற சகல குற்றங்கள் குறித்தும் ஆராயும். இந்த அலுவலகத்தின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி விரிவாகக் கலந்துரையாடலாம் - என்றார்.


காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்



SUPERMARKET

4th Project

இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள்
ஆரம்பம்
20.04.2025

கற்கும் போதே
தொழில் ஆற்றக்
கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.11.2025இல் வெளியிடப்பெற்றது